# அலை துள்ளி விளையாடுதே

அலை துள்ளி விளையாடுதே
புவியாளும் மரியன்னை திருக்கோவிலில்
எந்நாளும் சந்தோஸமே

**1**
தென் திசையைத் தேடிவரும் மேகங்களே
தேன் வழியும் பூவுதிரும் சோலைகளே
மூங்கில்தனில் பாட்டிசைக்கும் இராகங்களே
மாமரியின் கீதங்களை பாடுங்களே
தென்றல் இசையாதோ அன்னை இசைபாட
நெஞ்சம் நனையாதோ
அன்னை மொழி பேச

**2**
தாரகையே தேவதையே வான்சுடரே
பூந்தளிரே பொன்சுடரே தேன் மலரே
பாலகரின் தாயமுதே காவியமே
பாவ இருள் நீக்க வரும் ஓவியமே
உள்ளம் நிறையாதோ
உன்னழகில் நாளும்
கள்ளமறையாதோ கண்ணழகில் நாளும்